FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364163

1. District மாவட்டம்: Dharmapuri PS: VGAC காவல்நிலையம் Year: 2026 FIR No.: 7/AC/2026 Date: நாள் 23.09.2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : 22.09.2026 Prior to 15:00 Hrs நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : 22.09.2026 காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : 23.00 Hrs நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 151 3063159 பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Suo Moto
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
O/o the Executive Officer, Selection Grade Town Panchayat Pappireddipatti, Dharmapuri District about 55 km Southeast
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Mr. NAGARAJAN (b) Father's/ Husband's Name : Tr. T.A. MARIAPPAN, தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 58/2026 நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : Indian நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Deputy Supdt. of Police தொழில் (g) Address : முகவரி O/o the Deputy Superintendent of Police Vigilance and Anti-Corruption, Dharmapuri.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. G. NAGARAJAN, age 58/2026, S/o. Govindarajulu, Executive Officer, Selection Grade Town Panchayat, Pappireddipatti, Dharmapuri District.
2) Tr. R. Sambath, age 42/2026 S/o. Rajamani, Junior Assistant O/o Selection Grade Town Panchayat, Pappireddipatti, Dharmapuri District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு -

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் -

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheets are enclosed herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Suo Moto

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

M.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 23/09/26

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

24.09.2026 at 11.45 hrs.

Name: பெயர் M. NAGARAJAN
Rank: நிலை Deputy Superintendent of Police No/எண் .....
Vigilance and Anti-Corruption,
Dharmapuri.

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.7/AC/2026, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12–ன் தொடர்ச்சி.

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் M.நாகராஜன் ஆகிய நான் 22.09.2026-ம் தேதி செவ்வாய்கிழமை மாலை 17.00 மணிமுதல் இரவு 23.00 மணிவரையில் தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலும், உத்தரவு கிடைக்கப்பெற்றதின் பேரிலும் 23.09.2026-ம் தேதி மாலை 17.00 மணிக்கு, தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.7/AC/2026, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 –ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் விபரம் பின்வருமாறு.

*** *** ***

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு.G.நாகராஜன் மற்றும் இளநிலை உதவியாளர் திரு.R.சம்பத் ஆகியோர் பேரூராட்சி அலுவலகத்தில் சுகாதார பொருட்கள், மின்சாதன பொருட்கள், குடிநீர் இணைப்பிற்குரிய பொருட்கள் சப்ளை செய்யும் ஒப்பந்ததாரர்களிடமிருந்தும், பொதுமக்கள், கட்டிட வரைபட உரிமம் பெற்றவர்கள், பேரூராட்சி கடைகளை குத்தகைக்கு எடுத்துள்ளவர்களிடமிருந்தும் மற்றும் புரோக்கர்கள் மூலமாகவும் நேரடியாகவும், கூகுள்பே, போன்பே மூலம் கையூட்டு பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில், 22.09.2026–ம் தேதி 13.00 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் அவரது அலுவலக தொலைபேசியில் இருந்து அரசு சாட்சிகளை அனுப்புமாறு சம்மந்தப்பட்ட அரசு உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில், அரசு சாட்சிகள் திரு.N.உதயராஜ், கண்காணிப்பாளர், மாவட்ட கல்வி அலுவலகம் (தொடக்கக் கல்வி) தருமபுரி மற்றும் திரு.R.வெற்றிவேல், உதவியாளர், இணை ஆணையாளர் அலுவலகம், இந்து சமய அறநிலைத்துறை, தருமபுரி ஆகியோர் 13.45 மணிக்கு தருமபுரி மாவட்ட ஊழல்

தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் வந்து அறிக்கை செய்தனர். பின்னர் மேற்படி அரசு சாட்சிகள் மற்றும் காவலர்கள் குழுவினருடன் 14.00 மணிக்கு அரசு வாகனம் TN 21 G 0635 என்ற நான்கு சக்கர வாகனத்திலும், TN 22 G 1039 என்ற இரண்டு சக்கர வாகனத்திலும் மற்றும் காவலர்கள் அவரவர் வாகனங்களில் தருமபுரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து புறப்பட்டு, தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகத்திற்கு 15.00 மணிக்கு திடீர் சோதனை செய்ய சென்றோம். அப்போது அந்த அலுவலகத்தில் அலுவலர்கள் அவரவர் இருக்கையில் அமர்ந்து அலுவல்பணி செய்துக் கொண்டிருந்தனர். அந்த ஹாலில் தலைமை எழுத்தர் இருக்கையில் பணியில் இருந்த ஒருவரிடம் நானும், என்னுடன் வந்த அரசு சாட்சிகள் மற்றும் காவல் குழுவினர்களையும் அறிமுகம் செய்து கொண்டு, அவரைபற்றி விசாரிக்க அவர் தனது பெயர் திரு.M.குமார் என்றும், பாப்பிரெட்டிப்பட்டி தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகத்தில் தலைமை எழுத்தராக கடந்த 05.12.2025 முதல் பணிபுரிந்து வருவதாகவும் கூறினார். அவரிடம் பாப்பிரெட்டிப்பட்டி பேரூராட்சி அலுவலகத்தை திடீர் சோதனை செய்ய வந்திருக்கும் விவரத்தை தெரிவித்து, அதன் பிறகு அரசு சாட்சிகள் முன்னிலையில் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது அந்த அலுவலகத்தில் இருந்த அலுவலர்கள் மற்றும் தனிநபர் ஆகியோர்களை அலுவலகத்தின் மத்திய அறைக்கு அழைத்து வரப்பட்டது. அப்போது பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், சேலம் பொறுப்பு தருமபுரி மாவட்டம் திரு.முகமதுரியாஷ் என்பவரின் செல்.8925809216–க்கு தொடர்பு கொண்டு பாப்பிரெட்டிப்பட்டி செயல் அலுவலர் அவர்களை உடனே பாப்பிரெட்டிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு தகவல் தெரிவிக்கப்பட்டது. பிறகு அங்கிருந்த அனைவரிடமும் திடீர் சோதனை செய்ய வந்திருக்கும் விவரத்தை தெரிவித்து, அரசு சாட்சிகள் மற்றும் காவலர்கள் ஆகியோர் முன்னிலையில் அவர்களை தனித்தனியே சோதனை செய்து, அவரவர் வைத்திருக்கும் பணத்தை எடுத்து ஆஜர் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அப்போது திரு.மா.ரவி, இளநிலை உதவியாளர் அவர்கள் பணியில் இருந்து 15.05 மணி முதல் ஆப்சென்ட்டில் இருப்பதாகவும், இது குறித்து தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து இருப்பதாகவும் செயல் அலுவலர்

திரு.கோ.நாகராஜன் அவர்கள் 16.40 மணிக்கு நேரில் ஆஜராகி விவரம் தெரிவித்தார். அதன்பின்னர் 17.00 மணிக்கு சேலம் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.முகமதுரியாஷ் அவர்கள் நேரில் ஆஜரானார்கள். பின்னர் அந்த அறையில் இருந்த 9 அலுவலர்கள் மற்றும் 1 தனிநபர் மொத்தம் 10 நபர்கள் அவரவர்கள் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார்கள். அதில் 8 நபர்கள் அவர்களிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்து, தங்களின் சொந்த பணம் என்றும், செலவிற்காக எடுத்து வந்ததாகவும் விளக்கம் அளித்தனர். 2 நபர்களிடம் பணம் எதுவும் இல்லை. பணம் வைத்திருந்த நபர்கள் அளித்த விளக்கம் ஏற்றுக் கொள்ள தக்க வகையில் இருந்ததால், அவர்களது பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் அலுவலகத்தில் இருந்த இளநிலை உதவியாளர் திரு.R.சம்பத் அவர்களை விசாரிக்க, அவர் 13.03.2026–ம் தேதி முதல் பாப்பிரெட்டிப்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், மேலும் அவர் தனிநபர் பணபதிவேட்டில் 22.09.2026–ம் தேதி அவர் வசம் ரூ.750/–உள்ளதாக பதிவு செய்து கையொப்பம் செய்துள்ளதாகவும் தெரிவித்தார். ஆனால் சோதனையில் அவரிடம் ரூ.6500/– கண்டறியப்பட்டது. அவருடைய தனிநபர் பணம் ரூ.750/– போக மீதம் உள்ள ரூ.5750/– குறித்து அவரிடம் விளக்கம் கேட்க, அவர் மவுனமாக பதில் எதுவும் சொல்லாமல் இருந்தார். அதனால் அந்த பணம் பொதுமக்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து கையூட்டாக பெற்றிருக்க கூடும் என்று நம்புவதற்கு போதுமானமுகாந்திரம் இருந்ததால், அந்தபணம் ரூ.5750/– வழக்கின் நிமித்தம் மகஜரில் கைப்பற்றப்பட்டது. பின்னர் ஏற்கனவே கிடைத்த ரகசிய தகவலின் படியும், சந்தேகத்தின் பேரிலும் திரு.R.சம்பத், இளநிலை உதவியாளர் அவர்களின் கைப்பேசியை (கைபேசி எண்.9942510270) அரசு சாட்சிகள் முன்னிலையில் பெற்று போன்பே மற்றும் கூகுள்பே செயலிகளை ஆய்வு செய்ததில், அவர் கணக்கு வைத்துள்ள மாரண்டஅள்ளி கிளை இந்தியன் வங்கி கணக்கு எண். 6111170598 மற்றும் அவரது மனைவி திருமதி.கவிதா அவர்களின் பெயரில் தீர்த்தமலை கனரா வங்கி கிளையில் உள்ள கணக்கு எண்.1128101031046 ஆகிய வங்கி கணக்குகளின் போன்பே மற்றும் கூகுள்பே செயலிகளில் இணைத்து பயன்படுத்தி

வந்துள்ளதாக தெரியவருகிறது. மேலும் அவருடைய வங்கி கணக்கில் 22.09.2026–ம் தேதியில் வங்கி இருப்பு தொகையாக ரூ.11,002.53 எனவும், அவரது மனைவியின் வங்கி கணக்கு இருப்பு தொகை ரூ.2017.22 எனவும் இருந்தது. மேலும் திரு.R.சம்பத் அவர்கள் பாப்பிரெட்டிப்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் நாள் முதல் 22.09.2026–ம் தேதி வரை அவர் சம்பள பணம் பெறும் மேற்படி அவரது இந்தியன் வங்கி கணக்கில் அவரது சம்பள பணம் போக சந்தேகத்திற்கிடமாக ரூ.3,13,800/– அவரது வங்கி கணக்கிற்கு போன்பே மற்றும் கூகுள்பே மூலம் பல தவணைகளில் பல்வேறு நபர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளது. அந்த பணப்பரிவர்த்தனை குறித்து திரு.R.சம்பத் அவர்களிடம் விளக்கம் கேட்க, அதற்கு அவர் அவரது சொந்தக்காரர்கள், நண்பர்கள் மற்றும் தெரிந்த நபர்களிடமிருந்து பெற்றதாக தெரிவித்தார். திரு.R.சம்பத் அவர்களின் விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும், அந்தபணம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.G.நாகராஜன் அவர்கள் அரசு பணிசெய்வதற்கு பொதுமக்கள், ஒப்பந்ததாரர்கள், கட்டிடவரைபட உரிமம் பெற்றவர்கள் மற்றும் பேரூராட்சி கடைகளை குத்தகைக்கு எடுத்துள்ளவர்களிடமிருந்தும் கையூட்டாக கேட்டு, திரு.R.சம்பத் மூலம் பெற்றிருக்க கூடும் என்று நம்புவதற்கு போதுமான முகாந்திரம் உள்ளது. மேலும் அவரது வங்கி கணக்கிலும், அவரது மனைவி வங்கி கணக்கிலும் பல சந்தேகத்திற்கிடமான பணபரிவர்த்தனைகள் நடைபெற்றுள்ளது. அந்த பணம் பற்றி முழு விசாரணைக்கு உகந்தது என்று தீர்மானிக்கப்பட்டது. பின்னர் அலுவலகத்தில் இருந்த வரிதண்டலர்–2 திரு.K.ஆறுமுகம் என்பவரை விசாரிக்கப்பட்டது. அப்போது அவர் தனது பேன்டின் வலதுப்புற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.18,850/–ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது பற்றி அவரிடம் விளக்கம் கேட்டபோது, அந்தபணம் 22.09.2026–ம் தேதி சொத்துவரி செலுத்தவேண்டியவர்களிடமிருந்து வசூல்செய்த பணம் என்றும், அடுத்த நாள் பாப்பிரெட்டிப்பட்டி இந்தியன் வங்கியில் அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டும் என்றும், தெரிவித்தார். 22.09.2026–ம் தேதி திரு.K.ஆறுமுகம் அவர்களிடம் சொத்துவரி செலுத்தியவர்களின் 9 ரசீதுகளை பார்வையிட்டதில் ரூ.20,236/– வசூல்

செய்யப்பட்டுள்ளது. வசூல் செய்த தொகையில் ரூ.1386/– குறைவாக உள்ளது. இது குறித்து வரிதண்டலர்–2 திரு.K.ஆறுமுகம் அவர்களிடம் விளக்கம் கேட்க, வசூல் தொகையில் குறைவாக உள்ள தொகை ரூ.1386/– தனது போன்பே மூலம் சொத்துவரி செலுத்தியவர்களிடம் வசூல் செய்ததாகவும், தனது வங்கி கணக்கில் இருந்து அந்த தொகை எடுத்து அரசு கணக்கில் செலுத்த இருப்பதாகவும் தெரிவித்தார். போன்பே மூலம் வரி வசூல் செய்ய அரசு உத்தரவுகள் ஏதேனும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா என்று அவரிடம் கேட்க, அவ்வாறு உத்தரவுகள் எதுவும் இல்லை என்றும், அவர்களின் வசதிக்காக போன்பே மற்றும் கூகுல்பே மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.30,000/– முதல் ரூ.50,000/– வரை வசூலித்து அடுத்த நாள் வங்கியில் அரசு கணக்கில் செலுத்தி வருவதாகவும் தெரிவித்தார். ஆனால் இது பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் அலுவலக ந.க.எண்.2410/2024/இ5, நாள் 20.09.2024–ன்படி விதிமீறிய செயலாகும். அந்த பணம் ரூ.18,850/– ஐ அவரிடம் திரும்ப ஒப்படைத்து உரிய அரசு கணக்கில் செலுத்த அறிவுறுத்தப்பட்டது. இதற்கு அவர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. மேலும் சந்தேகத்தின்பேரில் வரிதண்டலர்–2 திரு.K.ஆறுமுகம் அவர்களின் கைப்பேசியை பெற்று அரசு சாட்சிகள் முன்னிலையில் போன்பே செயலியை ஆய்வு செய்ததில், 08.09.2026–ம் தேதி அவர் பாப்பிரெட்டிப்பட்டி பேரூராட்சி அலுவலக இளநிலை உதவியாளர் திரு.R.சம்பத் அவர்களுக்கு ரூ.10,000/– அனுப்பியுள்ளார். அது குறித்து அவரிடம் விளக்கம் கேட்க, அந்த பணம் கொடிநாள் வசூல் கணக்கில் செலுத்தவேண்டி திரு.R.சம்பத் அவர்கள் கேட்டுக் கொண்டதின்பேரில் தான் அனுப்பியதாக தெரிவித்தார். மேலும் அது குறித்து திரு.R.சம்பத் அவர்களிடம் விளக்கம் கேட்க, மேற்படி ஆறுமுகம் என்பவரிடம் ரூ.10,000/– ஐ போன்பே மூலம் பெற்று அதை தனது வங்கி கணக்கிலிருந்து பாரதி.கே என்ற தனிநபரின் பெயரில் அரசுக்கு கொடிநாள் வசூல் கணக்கில் செலுத்தியதாக தெரிவித்தார். இது உதவி இயக்குநர் முன்னாள் படைவீரர் நலம், தருமபுரி அவர்களின் அலுவலக ந.க.எண்.260/2024/அ3, நாள் 23.10.2024–ன்படி விதி மீறிய செயலாகும். கொடிநாள் வசூல் காசோலையாகவோ இணையதளம் மூலமாகவோ மட்டுமே, கொடிநாள் நிதி வழங்குபவர்களே நேரடியாக அரசு

கணக்கில் செலுத்த வேண்டும். பின்னர் செயல் அலுவலர் திரு.G.நாகராஜன் அவர்களிடம் பாப்பிரெட்டிப்பட்டி பேரூராட்சி அலுவலகத்திற்கு கொடிநாள் வசூல் ஏதேனும் ஒதுக்கப்பட்டுள்ளதாக என்று கேட்க, தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள் செ.மு.ஆ.எண்.194/2026/பே.4, நாள் 21.01.2026–ன்படி, பாப்பிரெட்டிப்பட்டி பேரூராட்சி அலுவலகத்திற்கு 07.12.2025 முதல் 06.12.2026 வரை ரூ.75,000/- இணையதளம் மூலம் வசூல் செய்ய நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். பின்னர் செயல்அலுவலர் திரு.G.நாகராஜன் அவர்களிடம் விசாரிக்க அவர் தான் 13.03.2026–ம் தேதி முதல் பாப்பிரெட்டிப்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில் செயல் அலுவலராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். ஏற்கனவே கிடைத்த ரகசிய தகவலின்படியும், சந்தேகத்தின்பேரிலும் திரு.G.நாகராஜன், செயல் அலுவலர் அவர்களின் கைப்பேசியை (கைபேசி எண்.7502797699) அரசு சாட்சிகள் முன்னிலையில் பெற்று போன்பே மற்றும் கூகுள்பே செயலிகளை ஆய்வு செய்ததில், அவர் கணக்கு வைத்துள்ள கெலமங்கலம் கிளை இந்தியன் வங்கி சம்பள கணக்கு எண்.873439975–ல் 22.09.2026–ம் தேதியில் வங்கி இருப்பு தொகையாக ரூ.7,03,417.10/–இருந்தது. அந்த வங்கி இருப்பு குறித்து திரு.G.நாகராஜன் அவர்களிடம் விளக்கம் கேட்க, அதற்கு அவர் அந்த பணம் தனது சம்பள பணம் என்றும், கடந்த ஒரு வருடமாக சம்பள பணத்தை எடுக்காமல் எதிர்கால தேவைக்காக இருப்பு வைத்துள்ளதாகவும், தனது குடும்ப செலவிற்கு தனது மகன் சம்பாதிப்பதாகவும் தெரிவித்தார். திரு.G.நாகராஜன் அவர்களின் விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் இல்லை. மேலும் அவர் அரசு பணிசெய்வதற்கு பொதுமக்கள், ஒப்பந்ததாரர்கள், கட்டிடவரைபட உரிமம் பெற்றவர்கள் மற்றும் பேரூராட்சி கடைகளை குத்தகைக்கு எடுத்துள்ளவர்களிடமிருந்தும் கையூட்டாக கேட்டு இளநிலை உதவியாளர் திரு.R.சம்பத் மூலம் பெற்றிருக்க கூடும் என்று நம்புவதற்கு போதுமான முகாந்திரம் உள்ளது. மேலும் அவரது வங்கி கணக்கில் உள்ள இருப்பு தொகைபற்றி முழு விசாரணைக்கு உகந்தது என்று தீர்மானிக்கப்பட்டது. பின்னர் இந்த திடீர்

தணிக்கையின்போது, கேட்டுக் கொண்டதற்கிணங்க, செயல் அலுவலர் திரு.G.நாகராஜன் அவர்கள் அவரது அலுவலர்கள் மூலம் பணியாளர்களின் வருகைப்பதிவேடு–2026, பகிர்மானபதிவேடு–2026, டெண்டர் பதிவேடு–2025-26, காசோலைபெறும் பதிவேடு – 2024-26, மன்றதீர்மானபதிவேடு –2026, பணபதிவேடு –2026-27 (SNA), பிறப்பு பதிவேடு–2024, இறப்பு பதிவேடு–2023 to 2026 மற்றும் தனிநபர் பணபதிவேடு ஆகியவற்றை ஆஜர் செய்தார். அந்த ஆவணங்களை பார்வையிட்டதற்கு அடையாளமாக சம்மந்தப்பட்ட பக்கங்களில் நானும், அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்தோம். பின்னர் அப்பதிவேடுகளின் சம்மந்தப்பட்ட பக்கங்களை ஒளிநகல் எடுக்கப்பட்டு, செயல் அலுவலர் திரு.G.நாகராஜன் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு தொடர் விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது.. பின்னர் திரு.G.நாகராஜன், செயல் அலுவலர் மற்றும் திரு.R.சம்பத், இளநிலை உதவியாளர் ஆகியோர்களை அரசு சாட்சிகள் முன்னிலையில் தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீர் சோதனை குறித்து 22.09.2026–ம் தேதி மாலை 17.00 மணி முதல் இரவு 23.00 மணிவரை செயல்முறை நடவடிக்கைகள் என்னால் தயார் செய்யப்பட்டது. இந்த திடீர் சோதனையில், தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திரு.G.நாகராஜன் அவர்களின் கைப்பேசியின் (கைபேசி எண்.7502797699) போன்பே மற்றும் கூகுள்பே செயலிகளை ஆய்வு செய்ததில், அவர் கணக்கு வைத்துள்ள கெலமங்கலம் கிளை இந்தியன் வங்கி சம்பள கணக்கு எண்.873439975–ல் 22.09.2026–ம் தேதியில் வங்கி இருப்பு தொகையாக ரூ.7,03,417.10/–இருந்தது கண்டறியப்பட்டது. இது குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவரால் திருப்திகரமான விளக்கம்தர இயலவில்லை. மேலும் மேற்படி திடீர் சோதனையின் செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் ஆவணங்களை பரிசீலித்ததில் இருந்தும், ஏற்கனவே எனக்கு கிடைத்த தகவல்படி, மேற்டி இருப்பு தொகையானது பேரூராட்சி செயல் அலுவலர் திரு.G.நாகராஜன் அவர்கள் தனது பதவியை துஷ்பிரயோகம் செய்தும், அரசு பணிசெய்வதற்கு பொதுமக்கள், ஒப்பந்ததாரர்கள், கட்டிடவரைபட உரிமம் பெற்றவர்கள் மற்றும் பேரூராட்சி கடைகளை குத்தகைக்கு

எடுத்துள்ளவர்களிடமிருந்தும் கையூட்டாக கேட்டு இளநிலை உதவியாளர் திரு.R.சம்பத் மூலம் பெற்றிருக்க கூடும் என்று நம்புவதற்கு போதுமான முகாந்திரம் உள்ளது என்று அறியப்பட்டதாலும், மேலும் பாப்பிரெட்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.R.சம்பத் அவர்களிடம் கைப்பற்றப்பட்ட ரூ.5750/– குறித்து அவரிடம் விளக்கம் கேட்க, அவர் மவுனமாக பதில் எதுவும் சொல்லாமல் இருந்தார். அதனால் அவர் தனது பதவியை துஷ்பிரயோகம் செய்தும், பொதுமக்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து கையூட்டாக பெற்றிருக்க கூடும் என்று நம்புவதற்கு போதுமானமுகாந்திரம் இருந்ததாலும், மேலும் அவர் பாப்பிரெட்டிப்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் நாள் முதல் 22.09.2026–ம் தேதி வரை அவர் சம்பள பணம் பெறும் மாரண்டஅள்ளி இந்தியன் வங்கி கணக்கில் அவரது சம்பள பணம் போக சந்தேகத்திற்கிடமாக ரூ.3,13,800/– அவரது வங்கி கணக்கிற்கு போன்பே மற்றும் கூகுள்பே மூலம் பல தவணைகளில் பல்வேறு நபர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளது. அந்த பணப்பரிவர்த்தனை குறித்து திரு.R.சம்பத் அவர்களிடம் விளக்கம் கேட்க, அதற்கு அவர் அவரது சொந்தக்காரர்கள், நண்பர்கள் மற்றும் தெரிந்த நபர்களிடமிருந்து பெற்றதாக தெரிவித்தார். திரு.R.சம்பத் அவர்களின் விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும், அந்தபணம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.G.நாகராஜன் அவர்கள் அரசு பணிசெய்வதற்கு பொதுமக்கள், ஒப்பந்ததாரர்கள், கட்டிடவரைபட உரிமம் பெற்றவர்கள் மற்றும் பேரூராட்சி கடைகளை குத்தகைக்கு எடுத்துள்ளவர்களிடமிருந்தும் கையூட்டாக கேட்டு, திரு.R.சம்பத் மூலம் பெற்றிருக்க கூடும் என்று நம்புவதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாக அறியப்பட்டதாலும், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குர் அலுவலக உத்தரவுப்படி எதிரி 1) திரு.G.நாகராஜன், வயது 58/2026, த/பெ.கோவிந்தராஜுலு, செயல் அலுவலர், தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகம், பாப்பிரெட்டிபட்டி, தருமபுரி மாவட்டம் மற்றும் எதிரி 2) திரு.R.சம்பத், வயது 42/2026, த/பெ.ராஜாமணி, இளநிலை உதவியாளர், தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகம், பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி மாவட்டம் ஆகியோர்கள் மீது தருமபுரி

மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.7/AC/2026, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் திடீர் சோதனையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளின் அசல் மற்றும் எதிரிகளின் வாக்குமூலங்கள் அசல் ஆகியவற்றை மாண்புமிகு தருமபுரி மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் மேல் நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்பட்டது.

(M.நாகராஜன்)
காவல் துணை கண்காணிப்பாளர், 23/09/26
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
தருமபுரி.